# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி.22:20



சகோ. காலேப் யோசுவா

2வது குறுக்குத் தெரு, 11.திருமால் நகர்
பூவிருந்தவல்லி, சென்னை. 600 056


## ஜெபர்சன்வில்லிலுள்ள வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ்-குள் சாத்தான் புகுந்தான் லூக். 22:3

## Satan entered into Voice of God Recordings, Jeffersonville

1. பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே,
பிதாவாகிய தேவனாலும் நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2. 2004, ஆகஸ்ட் மாதம் 18-ம் தேதி மாலை இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ளவர்களில் என்னை அதிகமாக நேசிக்கும் சென்னை, பம்மல், சகோ.அந்தோணிதாஸ் அவர்கள் இல்லத்திற்கு சென்றிருந்தேன். கணவனும் மனைவியும் ஆவிக்குரியவர்கள், ஒரு ஆவிக்குரிய குடும்பம். பொதுவாக நான் இவர்கள் இல்லத்திற்கு மாதம் ஒரு முறை மாலை 4.30 மணியளவில் செல்வது வழக்கம். சகோ.அந்தோணிதாஸ் மற்றும் சகோதரி குளோரி இருவரும் இரவு சுமார் 9.00 மணிவரைக்கும் என்னோடு அமர்ந்து அநேக ஆவிக்குரிய காரியங்களை, இக்காலத்திற்குரிய செய்திக்கடுத்தக் காரியங்களை, நமது மத்தியிலுள்ள சபைக்கடுத்தக் காரியங்களை பகிர்ந்துக்கொள்வது வழக்கம்.

3. சம்பவத்தன்று நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் வேளையில், 1தெச.4:16,17 வசனங்களில் கூறப்பட்டுள்ளபடி கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்றதொரு உபதேசம் நம் மக்கள் மத்தியில் இருப்பதாகவும், அதற்கு ஆதாரமாக அவர்கள் ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு, பக்கம் 176, பத்தி 256-ஐ சுட்டிக் காட்டுவதாகவும் கூறினார்கள். அந்தப் பத்தியின் விபரம்: கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கிறவர்கள் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை. ஏனெனில் கடைசி எக்காளத்தில் தேவ எக்காளம் முழங்கும். கடைசி முத்திரை உடைக்கப்பட்டிருக்கும்பொழுது ஏழாம் தூதன் தன் செய்தியை அளிக்கும்பொழுது கடைசி எக்காளம் முழங்கும். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள். உயிரோடிருக்கும் நாமும் அவர்களோடுக்கூட எடுக்கப்பட்டு அவரை ஆகாயத்தில் சந்திப்போம் என உள்ளது. இதை ஆதாரமாகக் கொண்டு ஏழாம் சபைக்காலத் தூதன் தன் செய்தியைக் கொடுத்துக்கொண்டிருக்கும்பொழுது தேவஎக்காளத்தோடு கர்த்தர் வானத்திலிருந்து இறங்கி வந்துவிட்டார் என்ற உபதேசத்தைக் குறித்து தியானிக்கலானோம்.

4. இந்தப் பகுதியில் ஏழாம் தூதன் தன் செய்தியை அளிக்கும்பொழுது கடைசி எக்காளம் முழங்கும் என்ற வார்த்தையில் எனக்கு முற்றிலுமாக ஆவியில் ஒருமனப்பாடு அந்தச் சமயத்தில் ஏற்படவில்லை. ஆதலால் அது குறித்து நான் அடுத்த முறை அவர்களைச் சந்திக்கும்போது பேசலாம் எனக் கூறிவிட்டேன்.

5. மறுநாள் எனது இல்லத்தில் இந்தப் பகுதியை திரும்பத்திரும்ப வாசித்துப் பார்த்தேன். ஆனாலும் எனக்கு அந்த வார்த்தையில் முற்றிலுமாக ஒருமனப்பாடு ஏற்படவில்லை. ஆவியின் வழிநடத்துதலும் இல்லை. ஏனென்றால் இந்த வார்த்தை தேவனுடைய வார்த்தையோடு இசைந்து போவதாக எனக்குத் தெரியவில்லை. 1967-ல் வெளியிடப்பட்டு, பின் 1993-ல் மறுப்பதிப்புச் செய்யப்பட்ட ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு (The Revelation of the Seven Seals) ஆங்கிலப் பிரதியை எடுத்து வாசிக்கலானேன். அதன் விபரம்: And even those who are alive and remain till His coming, shall not hinder them which are asleep. For the trumpet of God shall sound, at that last trumpet. When the last Seal is broke, and **when the seventh angel is giving his message, the last trumpet shall sound, and the dead in Christ shall rise.** And we which are alive and remain shall be caught up together with them, to meet Him in the air. He claims! (The Revelation of the Seven Seals, reprinted in 1993, page 93 & 94 Para 256.

6). வாய்ஸ் ஆப் காட், தீர்க்கதரிசியின் செய்தி டேப் என்னக்கூறியதோ அதையே ஆங்கிலத்தில் புத்தகவடிவில் கொண்டுவந்துள்ளார்கள், கொண்டுவருகிறார்கள். ஆங்கில புத்தகத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்துள்ளார்கள். ஆக ஆங்கிலப் புத்தகத்திலும் தமிழ் புத்தகத்திலும் இந்த வார்த்தை சரியாகவே உள்ளது. ஒன்றுக்கொன்று முரண்பாடு கிடையாது. இப்படியிருக்க ஏன் எனக்கு அதில் ஆவியின் வழிநடத்துதல் இல்லையென்று எண்ணினேன், சிந்தித்தேன். முடிவாக கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்தேன். ஆனால் ஒன்று நிச்சயமாக ஏழாம் சபைக்காலத் தூதன் இவ்வாறு பிரசங்கித்திருக்க முடியாது என்ற உணர்வு என் உள்ளத்தின் ஆழத்திலிருந்தது. இதுக்கூடுமானால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதான கொடிய வஞ்சிப்பின் காலம். ஆனால் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் நிச்சயமாக 100% வஞ்சிக்கப்படமுடியாது என்பதையும் நன்கு அறிந்தவனாயிருக்கிறேன்.

7. ஒருபுறம் மனது ஆங்கிலத்திலும், தமிழிலும் சரியாகத் தானே இந்த வார்த்தையுள்ளது. பின் ஏன் மனதைப் போட்டுக் குழப்பவேண்டும்? கர்த்தர் வந்துவிட்டார் என்ற உபதேசத்தைக் கொண்டு வந்தவர்கள் இந்த வார்த்தையை முற்றிலுமாக விசுவாசிக்கிறார்கள், உபதேசிக்கிறார்கள். நாமும் இந்த வார்த்தையை அப்படியே ஏற்றுக்கொண்டு கர்த்தர் வந்துவிட்டார் என்று விசுவாசிக்க வேண்டியது தான் என்ற எண்ணம் எழுந்தது.

8. மறுபுறம் இந்த வார்த்தையில் ஏதோ தவறு உண்டு. நிச்சயமாக சகோ.பிரன்காம் இவ்வாறு பிரசங்கித்திருக்க முடியாது. அவர் இவ்வாறு பிரசங்கித்திருப்பாராகில் அவருடைய செய்தியில் ஏதோ தவறு உண்டு. ஆதலால் இதை மேலும் நிதானமாக, பொறுமையாக தியானிக்கவேண்டும் என்று முடிவு எடுத்தேன்.

9. இவ்வாறாக நான் ஆழ்ந்த சிந்தனையிலிருந்துக் கொண்டிருந்த வேளையில், ஒரு எண்ணம் என் உள்ளத்தில் உதித்தது. தேவன் என்னோடு இடைப்படலானார். அதாவது தீர்க்கத்தரிசி செய்தி டேப் என்ன சொல்லுகிறதோ அதை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள் என்று நமக்கு அறிவுரை கூறியுள்ளாரேயன்றி, செய்திப் புத்தகங்கள் என்ன கூறுகிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறவில்லை. ஆதலால் இந்தப் பகுதிக் குறித்து செய்தி டேப் என்ன கூறுகிறது என்றுப் பார்ப்போம் என ஒரு முடிவு எடுத்தேன்.

10. நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கேட்டு அதைப் பற்றிக்கொள்ளுங்கள். இதை நீங்கள் ஒலிநாடாக்களில் (**Tapes**) பதிவுச்செய்தால், ஒலிநாடாக்களிலுள்ள போதனையில் நிலைக் கொண்டிருங்கள். ஒலிநாடாக்கள் கூறியதை தவிர வேறொன்றையும் கூறாதீர்கள். ஒலிநாடாக்கள் சொல்கிறதை மாத்திரம் சொல்ல ஜாக்கிரதையாயிருங்கள். பாருங்கள்? இப்பொழுது, ஏனெனில் நாம் முழுமையாகப் புரிந்துக்கொள்ளப்போகும் காரியங்கள், தவறாகப் புரிந்துக்கொள்ளப்படலாம். பாருங்கள்? ஒலிநாடாக்கள் சொல்லுவதையே சொல்ல நிச்சயமுள்ளவர்களாயிருங்கள். வேறொன்றையும் சொல்லாதீர்கள். பாருங்கள்? இதை நான் என் சுயமாய் சொல்லவில்லை. தேவன் தான் இதைக் கூறுகிறார். ஒலிநாடாக்கள் சொல்லாததைச் சொல்வதன் மூலம் அநேக சமயங்களில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. அநேகர் எழுந்திருந்து இதற்கு இது தான் அர்த்தம் என்று இன்னார்.. இன்னார் கூறினார் என்று கூறுகின்றனர். ஒலிநாடாக்கள் சொல்லுவதை அப்படியே ஏற்றுக்கொண்டு அதோடு விட்டுவிடுங்கள். பாருங்கள், அவ்விதமாகவே வேதம் கூறுவதை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளுதல் அவசியம். உங்கள் சொந்தக்கருத்தை அத்துடன் சேர்க்காதீர்கள். ஏனெனில் வேதம் ஏற்கனவே வியாக்கியானம் செய்யப்பட்டதாகிவிட்டது. (ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு - புதியபதிப்பு, பக்கம் 30, பத்தி 106, 107)

11. நான் செய்தியின் பிரகாரமாக செய்தி டேப் போட்டுக் கேட்டப்போது அது முற்றிலும் மாறாக இருந்தது. உள்ளத்தில் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினேன். ஒரு பரவசம் என் உள்ளத்தில் மகிழ்ச்சினால் உண்டாயிற்று. செய்தி டேப் இவ்வாறாகக் கூறியது: **When the seventh angel has given his message.** உடனே ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு பழைய ஆங்கிலம் மற்றும் பழைய தமிழ் பிரதிகளை எடுத்தேன். ஆங்கில பிரதியில் **When the seventh angel has given his message** என இருந்தது. தமிழ் பிரதியில் ஏழாம் தூதன் தன் செய்தியை அளித்தப் பின்னர் என இருந்தது. ஆக வாய்ஸ் ஆப் காட்குள் புதிய பதிப்பு என்பதன் பேரில் சாத்தான் புகுந்துவிட்டான் என்பதை கர்த்தர் வெளிப்படுத்தினார். அடுத்து C.D. யிலிருந்து இந்தப் பகுதியை எடுத்தேன். அதில் கூட செய்தி டேப் கூறியவண்ணமாகவேயிருந்தது. **When the seventh angel's given his message.**

12. ஆக பிரியமானவர்களே நமது எதிராளியாகிய சாத்தானானவன் வாய்ஸ் ஆப் காட், ஜெபர்ஸ்சன்வில், இந்தியானா, அமெரிக்கா மூலம் செய்தியிலுள்ள மக்களை வஞ்சித்து வருகிறான் என அறியவந்தேன். தேவனுடைய சத்தத்திற்கு பதிலாக சாத்தானுடைய சத்தம் கேட்கப்பட்டு பிரிண்ட் செய்யப்படுவதை அறிந்துக்கொண்டேன். சாத்தான் மறுபதிப்பு (reprint) எனக் கூறி வாய்ஸ் ஆப் காட்-குள் தில்லுமுல்லுகள் செய்ய ஆரம்பித்துவிட்டான். இனி இவர்களது ஆங்கிலச் செய்திப் புத்தகங்களை நம்புவதுக் கூடாதக் காரியம். பாருங்கள் இவர்களது ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு, மறுபதிப்பினால் எத்தனையோ பேர் தவறான உபதேசத்தில் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்று உபதேசிக்கிறார்கள். இன்னும் ஆங்கிலச் செய்திப் புத்தகங்களில் எத்தனைத் தவறுகள் உள்ளதோ? நிச்சயமாக கர்த்தர் தம்மால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு ஏற்றவேளையில் அனைத்து தவறுகளையும் வெளிப்படுத்திக்காட்டுவார். அல்லேலூயா!

13. இதில் WBGNS சென்னை தமிழ் மொழிப்பெயர்ப்பை நாம் குற்றப்படுத்தமுடியாது. ஏனென்றால் அவர்கள் ஆங்கிலத்தில் என்ன உள்ளதோ அதை அப்படியே தமிழில் மொழிபெயர்த்துள்ளார்கள். ஆனால் ஒன்றை மட்டும் நாம் மனதில் கொள்ளவேண்டும். அதாவது இது வேலியே பயிரை மேய்க்கிற காலமாயிருக்கிறது. ஆம் நாம் கொடிய வஞ்சிப்பின் காலத்திலிருக்கிறோம்.

14. பிரியமானவர்களே, நீங்கள் VOGR ஐ நிர்வாகித்து வரும் தீர்க்கதரிசியின் மகன் சகோ. ஜோசப் பிரன்காமிற்கு கடிதங்கள் எழுதுங்கள். சகோதரனே, நீர் தீர்க்கதரிசியின் செய்தி மறுபதிப்பு என்ற பெயரின் கீழ் ஒன்றையும் கூட்டாதீர், ஒன்றையும் குறைக்காதீர், செய்தி டேப்பில் எவ்விதம் உள்ளதோ அதை அவ்விதமாகவே பிரிண்ட் செய்யுங்கள். செய்தியில் is என்ற இடத்தில் was இருந்தால் அது உள்ளது போல் was என்றே பிரிண்ட் செய்யுங்கள். உங்கள் சுயபுத்தியின் மேல் சார்ந்து அதை is என திருத்தவேண்டாம் என எழுதுங்கள். சென்னை VOGR நிர்வாகி சகோ.யோவேல் மூடி பரமானந்தம் அவர்களும் இது குறித்து தக்க நடவடிக்கைகள் எடுத்து ஆங்கிலப் பிரதியிலுள்ள அந்தப் பகுதியை செய்திடேப் கூறியவண்ணமாகவே திருத்த நடவடிக்கைகள் எடுப்பார் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். ஆனால் ஆதியிலே பிரன்காம் கிறிஸ்து ஆவி **VOGR** குள் நுழைந்துவிட்டது. அதையும் கர்த்தர் அனுமதித்துள்ளார். ஏனென்றால் இது தேவன் கொடிய வஞ்சிப்பை அனுப்பியுள்ளக் காலம்.

15. சென்னை VOGR கூட வரவர மாமியார் கழுதைபோல ஆனாள். என்ற நம் நாட்டு பழமொழிக்கேற்றாற்போலத் தான் அவர்களுடைய தமிழ் மொழிப்பெயர்ப்பு இந்நாட்களில் உள்ளது. இவர்களுடைய மொழிபெயர்ப்புகள் தரமாக இல்லை. தேவன் தம்முடைய வார்த்தையை காத்துக்கொள்கிறார்.- 2, இதில் தவறுகள் அதிகம் உண்டு.
அ) பத்தி 24, 185. **Dear blessed heavenly Father** என ஆங்கிலத்திலுள்ளதை எங்களுடைய ஆசீர்வதிக்கப்பட்ட பரலோகப் பிதாவே என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். இங்கு ஆசீர்வதிக்கப்பட்ட என்று மொழி பெயர்க்கும் பொழுது, பரலோகப்பிதாவை ஆசீர்வதித்தது யார்? பாருங்கள் பத்தி 94-ல் **Blessed be His name** என்பதை அவருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படுவதாக என்று சரியாக மொழிபெயர்த்துள்ளார்கள். அதுப்போன்று இங்கும் எங்களுடைய ஸ்தோத்தரிக்கப்பட்ட பரலோக பிதாவே என்று மொழிபெயர்த்திருந்தால் நலமாயிருந்திருக்கும்.
ஆ) பத்தி 170. **Blessed Jesus**. இதை ஆசீர்வதிக்கப்பட்ட இயேசுவே என்று மொழிபெயர்த்துள்ளார்கள். அப்படியானால் இயேசுவை ஆசீர்வதித்தது யார்? இதற்கு இவர்கள் தேவனுடைய வார்த்தையிலிருந்து ஆதாரங்கள் கொடுக்க முடியுமா? நிச்சயமாக கொடுக்கமுடியாது. ஆதலால் ஸ்தோத்தரிக்கப்பட்ட இயேசுவே என்ற மொழிப்பெயர்ப்புத் தான் சரி. இப்படிப்பட்ட தவறுகளை சென்னை சபை பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் அவர்களும் செய்துவருகிறார்கள். அவருடைய செய்கைகள் தவறு என்று எடுத்துக்கூறியும் அதைத்

திருத்துவதற்கு மனம் இல்லை. கௌரவம் பார்க்கிறார். ஏனென்றால் அவர் சுமார் 200 அங்கத்தினர்களைக் கொண்ட சபைக்கு பாஸ்டர் அல்லவா!

இ) பத்தி 129. **When all these great prophecies has been made** என்பது இந்த எல்லா தீர்க்கதரிசனங்கள் உண்டுபண்ணப்பட்டிருக்கும் போது என உள்ளது. தீர்க்கத்தரிசனங்களை உண்டுபண்ணுவதா? இது இந்த எல்லா பெரிய தீர்க்கத்தரிசனங்களும் உரைக்கப்பட்டிருக்கும் போது என்றே இருக்கவேண்டும்.

ஈ) பத்தி 88. இங்கு ஆங்கிலத்தில் **Jet Planes** என உள்ளது. இதை போர் விமானங்கள் என்று மொழிபெயர்த்திருக்கலாம். நாம் புரிந்துக்கொள்ள அது ஏதுவாகவும் இருக்கும். இதை விட்டுவிட்டு பீற்று வளி விசையால் இயங்கும் விமானங்கள் என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். பீற்று வளி விசையால் இயங்கும் விமானங்கள் என்றால் நிச்சயமாக நம்மில் யாருக்கும் புரியாது. அதுவென்னவென்றும் யாருக்கும் தெரியாது.

உ) பத்தி 63. இங்கு எகிப்தினர் இஸ்ரவேல் ஜனங்களை தவறாக நடத்தினார்கள் என மொழி பெயர்த்துள்ளார்கள். **Mistreated** என்ற வார்த்தைக்கு தவறாக என்று மொழிப்பெயர்த்துள்ளார்கள். எகிப்தினர் இஸ்ரவேல் ஜனங்களை தவறாக நடத்தவில்லை. மாறாக கொடுமையாக நடத்தினார்கள். இங்கு mistreated என்பது illtreated என்பதாகும்.

ஊ) பத்தி 60. **Sin must be dealt with on the basis of judgement** என்பதை பாவமானது நியாயத்தீர்ப்பின் அடிப்படையிலே இடைப்படவேண்டும் என மொழிப்பெயர்த்துள்ளார்கள். இது பாவமானது நியாயத்தீர்ப்பின் அடிப்படையில் நிர்வகிக்கப்படவேண்டும் என இருந்தால் நலமாயிருக்கும.

16. இவ்வாறாக VOGR சென்னை மொழிப்பெயர்ப்பும் தரமானதாக இல்லை. இவர்களது மொழிபெயர்ப்புகள் சுயபுத்தியின்மேல் சார்ந்ததாகவும், லௌகீக ஞானத்திற்கடுத்ததாகவும் இருக்கிறது. இனி தங்களது மொழிபெயர்ப்புகளை சரிப்படுத்திக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். பொதுவாக இவர்கள் VOGR அல்லது WBGNS ஆங்கில தமிழ் மொழிப்பெயர்ப்புகளில், அதை மொழிப்பெயர்த்தது யார் என்பதை புத்தகத்தில் தெளிவுப்படுத்தினால் நலமாயிருக்கும். மொழிப்பெயர்ப்பாளர் யார் என்பதை ஏன் மூடி மறைக்கவேண்டும்? அவர்களது பெயரை வெளியிடும்போது அந்த மொழிப்பெயர்ப்பாளர் யார், அவரது தகுதி என்ன என்பதை மக்கள் அறிந்துக்கொள்ள ஏதுவாக இருக்கும். இன்று மொழிப்பெயர்ப்புகளுக்கு ஒரு தொகை கிடைப்பதால் தங்களுக்கு நெருக்கமானவர்களை வைத்துக்கொண்டு மொழிப்பெயர்த்துவருகிறார்கள். இன்று மொழிப்பெயர்ப்பு ஒரு தொழிலாக மாறிவிட்டது.

17. முடிவாக எனக்குப் பிரியமானவர்களே, VOGR அமெரிக்காவிலிருந்து வரும் ஆங்கிலச் செய்திகள் அனைத்தையும் முற்றிலுமாக நம்பிவிடாதீர்கள். அங்கும் சாத்தான் நுழைந்துவிட்டான். ஆதலால் நீங்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து விழித்திருங்கள். உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகைத்தேடிச் சுற்றித்திரிகிறான். இக்காலத்திற்குரிய செய்தி, தீர்க்கத்தரிசியின் செய்தி, பிரன்காம், பிரன்காம் என்று கூறிக்கொண்டு சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கிரியைகளெல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. சகல எண்ணங்களையும், சகல செய்கைகளையும் தேவன் நியாயந்தீர்க்கும் காலம் இனி இருக்கிறபடியால் காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து சத்திய ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்த விழித்திருந்து ஜெபம் பண்ணுகிறதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். எல்லாவற்றிருக்கும் முடிவு சமீபமாயிற்று.

18. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்கள் ஆவியுடனே கூட இருப்பாராக. கிருபை உங்களோடிருப்பதாக ஆமென்.

அக்டோபர், 2004 (1)

கிறிஸ்துவின் அன்பில்
சகோ.காலேப் யோசுவா